நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று (17.10.2024) நடைபெற்றது. உடன் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், ஆவின் மேலாண்மை இயக்குநர்/ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சு.வினித், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.என்.எஸ்.நிஷா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர்சு.கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு.பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.

வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடுகள்

நீலகிரி மாவட்டத்தில் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது!

மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

உதகை, அக்.18-

நீலகிரி மாவட்டம், உதகை அரசு தமிழகம் விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் , ஆவின் மேலாண்மை இயக்குநர் ஃ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வினீத், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னி லையில், வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று (17.10.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமி நாதன் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்கூட்டியே பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்தால் அதனை எதிர்கொள்ளும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும். குறிப்பாக மழை பெய்யும்போதும், காற்றின் காரணமாகவும் மின் சாரம் தடைப்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் முன்கூட்டியே தேவையான மின்கம்பங்கள், அதற்குரிய உபகரணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அதேபோல், நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி, அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பாதிப்பு கள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக பொதுமக்களை அருகிலுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கும் வகையில் 1 மாத காலத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். மாவட்டத்தில் நடைபெற்று வரும் சாலைப் பணிகளை விரைவாக மேற்கொண்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்டம், மழை மாவட்டமாக உள்ளதால், மழைக்காலங்களில் மண்சரிவு ஏற்படாத வகையில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைத்துறை களின் சார்பில் மண்ஆணி பொருத்தும் பணி உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இருப்பினும் சில இடங்களில் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டால், உடனடியாக அதனை சீர்செய்து, போக்குவரத்து பாதிக்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பருவமழை காலத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் விழிப்புடன் இருந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததார்.

செய்தித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அந்தந்த மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் மழை மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரிடரால் பொதுமக்களுக்கு எவ்வித இடைய10றும் ஏற்படாத வகையில் துறை அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை 283 அபாயகரமான பகுதிகள் உள்ளது. இதனை தொடர்ந்து கண்காணிக்க 42 மண்டல குழு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் பேரிடர் காலத்தில் பொதுமக்களை பாதுகாப்பாக தங்கவைக்க ஏதுவாக 456 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு, தகவல் அளிக்கும் பட்சத்தில் உடனடியாக, அலுவலர்கள் விரைந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், வடகிழக்கு பருவமழையையொட்டி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால், பொதுமக்கள் எந்தவொரு அச்சமும் அடைய வேண்டாம் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் கௌதம் (நீலகிரி கோட்டம்), மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, வருவாய் கோட்டாட்சியர்கள் செந்தில்குமார் (கூடலூர்), சதீஷ் (உதகை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி.தனப்பிரியா, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. கீதாஞ்சலி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் (கட்டிடம் (ம) பராமரிப்பு) ரமேஷ், நகராட்சி ஆணையாளர்கள் ஜஹாங்கீர் பாஷா (உதகை), திருமதி.சசிகலா (குன்னூர்), முனியப்பன் (நெல்லியாளம் (ம) கூடலூர் (பொ)), மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், உதகை வட்டார போக்குவரத்து அலுவலர் தியாகராஜன், இணை இயக்குநர்கள் (மருத்துவ நலப்பணிகள்) (பொ) மரு.நாகபுஷ்பராணி, திருமதி. ஷிபிலா மேரி (தோட்டக்கலைத்துறை), துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு.வெங்கட்ரமணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கல்பனா, வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், கால்நடை பராமப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.சத்தியநாராயணன்,

'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் செல்வகுமார், உதவி இயக்குநர்கள் முகமத் ரிஸ்வான் (பேரூராட்சிகள்), சரவணகுமார் (ஊராட்சிகள்), ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் ராஜா, நகரமன்றத்தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி.சிவகாமி (கூடலூர்), திருமதி.பரிமளா (நெல்லியாளம்), துணைத்தலைவர்கள் ரவிக்குமார் (உதகை), வசீம்ராஜா (குன்னூர்), ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), ராம்குமார் (கோத்தகிரி), திருமதி.கீர்த்தனா (கூடலூர்), பேரூராட்சித்தலைவர்கள் செல்வி வள்ளி (தேவர்சோலை), .சித்ராதேவி (ஓவேலி), திட்டக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, திருமதி. விசாலாட்சி, அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் அமைந்துள்ள லேடி வில்லிங்டன் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டார். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ள நிலையில் மழையின் காரணமாக கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மாணவர்களின் வருகை குறித்து ஆசிரியப் பெருமக்களிடம் கேட்டறிந்தார். அப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறை கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

தீபாவளி சிறப்பு இயற்கை சந்தை

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்கள் விற்பனை!

சென்னை, அக்.18-

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் மூன்றாம் சனி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமைகளில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இயற்கை சந்தை (Natural Bazaar) நடத்தப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 19.10.2024 (சனிக்கிழமை) மற்றும் 20.10.2024 (ஞாயிற்றுக்கிழமை) தீபாவளி சிறப்பு இயற்கை சந்தை நடைபெறவுள்ளது.

இந்த இயற்கை சந்தையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் புத்தம் புதிய ஆடைகள், காஞ்சிபுரம் பட்டு சேலைகள், சேலம் இளம்பிள்ளை சேலைகள், பட்டுவேட்டி, சட்டைகள், விருதுநகர் காட்டன் புடவைகள், அரியலூர் வாரியங் காவல் காட்டன் புடவைகள், கோயம்புத்தூர் நெகமம் சேலைகள், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் தயாரிக்கப்படும் நைட்டிகள், ஈரோடு போர்வைகள் மற்றும் துண்டுகள், திருப்பூர் TShirt, Night Wear போன்ற தீபாவளி பண்டிகைக்கு தேவையான அனைத்து ஆடை வகைகளும் மற்றும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானிய மற்றும் சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்கள், காய்கறிகள் மற்றும் கீரைகள், பனை ஓலை பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்படும் பல் சுவை உணவு பொருட்களும் இந்த இயற்கை சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் அனைவரும் இயற்கை சந்தைக்கு வருகை தந்து , மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான உற்பத்திப் பொருட்களை வாங்கி மகிழ அன்புடன் அழைக்கின்றோம் என்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறை வாயிலாகவே

குடிநீர் - கழிவு நீர் வரி கட்டணங்களை செலுத்த வேண்டும்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, அக்.18-

நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்களை சென்னை குடிநீர் வாரிய அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டு மென தெரிவிக்கப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தால் அங்கீகரிக்கப்படாத சில நபர்கள், தொலைபேசி வாயிலாக நுகர்வோர்களை அணுகி குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டண நிலுவைத் தொகையை அவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணுக்கு Gpay, Phonepe, Paytm, போன்ற UPI செயலிகள் மூலம் செலுத்துமாறு கேட்பதாகவும் தவறும் பட்சத்தில் குடிநீர் / கழிவுநீர் இணைப்பு துண்டிக்கப்படும் எனக் கூறி பணம் பறிப்பதாக புகார்கள் வாரியத்திற்கு வருகின்றன.

எனவே, நுகர்வோர்கள் நிலுவைத் தொகையை செலுத்தும்போது எச்சரிக்கையாக இருக்குமாறும் தனிப்பட்ட மொபைல் எண்ணுக்கு நிலுவைத் தொகை செலுத்தக் கூறி, அங்கீகரிக்கப்படாத நபர்களிமிருந்து வரும் அழைப்புகளை நிராகரிக்குமாறும் சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக்கொள்கிறது.

மேலும், கீழே குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே வாரியத்திற்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை குடிநீர் வாரிய இணையதளமான www.cmwssb.tn.gov.in அல்லது நேரடி நிலுவைத் தொகை செலுத்தும் இணைப்பான https://bnc.chennaimetrowater.in /#/public/cuslogin ஆகிய இணைப்புகளின் வாயிலாக செலுத்தலாம்.

Gpay, Phonepe, Paytm போன்ற UPI செயலிகளில் உள்ள பயன்பாட்டு பில் செலுத்தும் வகையின் (Utilities Category under Bill payments option) கீழ் CMWSSB தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் பில் எண் & மொபைல் எண்ணை உள்ளிட்டு பணம் செலுத்தலாம்.

காசோலை / வரைவோலை / டெமிட் கார்டு / கிரெடிட் கார்டு மூலம் 15 பகுதி அலுவலங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள வசூல் மையங்கள் வாயிலாக செலுத்தலாம். வசூல் மையங்களில் உள்ள BBPS QR குறியீடுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் செலுத்தலாம்.

சென்னை குடிநீர் வாரிய பணிமனை மேலாளர்கள் கொண்டு வரும் iPoS இயந்திரங்கள் மூலம் செலுத்தலாம்.

மேலும், நுகர்வோர்கள் தங்களது நிலுவைத் தொகையை செலுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் 044-4567 4567 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு வாரியம் கேட்டுக்கொள்கிறது.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவை தலைவர் எஸ்.முத்தையா அவர்களின் மகன் எம்.ஈஸ்வரன் கடந்த வாரம் உடல் நலக் குறைவால் காலமானார். அவரது திருஉருவ படத்தை மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் தலைமைக் கழக சொற்பொழிவாளர் எழும்பூர் மோ. கோபிநாத், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தனசேகர், 7வது வட்ட விஜயராகவன், மு.வ.செ.ஆதி குருசாமி, எஸ்.திருப்பதி, ஆனந்தன், எஸ்.செல்வம், நிர்மல் தாஸ், ஜே.ஆர்.டி.சேகர், ராஜேஷ், கார்த்திக். மகேந்திரன். கணேசன். பி.கே.ராஜ், மகளிர் அணி புனிதா, ஹேமலதா, சந்திரலேகா, கௌசல்யா, ஆர்.விஜயா, காங்கிரஸ் விமல், தாஸ் மற்றும் குடும்பத்தினர் நண்பர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

கனமழையால் பாதிக்கப்பட்ட

மாதவரம் தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகள்!

புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் வழங்கினர்!

சென்னை, அக் 18-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதி 17வது வட்டத்திற்குட்பட்ட தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில் கனமழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளை வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் வழங்கினார்கள்.

17-வது வட்டத்திற்குட்பட்ட கொசப்பூர் தியாகி விஸ்வநாததாஸ் நகர், அரியலூர், பெரியார் நகர், செட்டிமேடு ஆகிய பகுதிகள் கனமழையால் மிகவும் பாதிக்கப்பட்டது.

தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில் சுற்றிலும் தொழிற்சாலைகள் மற்றும் கட்டிடங்கள் இருக்கின்ற காரணத்தினால் அப்பகுதியில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வெளியில் வராத சூழ்நிலை இருந்தது.

இத்தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மணலி மண்டல அலுவலர் கோவிந்தராஜ், செயற்பொறியாளர் தேவேந்திரன் ஆகியோருக்கு தகவல் கொடுத்ததன் அடிப்படையில், தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில் 3 மின்மோட்டார்கள் வைக்கப்பட்டு மழை நீர் துரிதமாக வெளியேற்றப்பட்டது.

அதேபோல் அரியலூர் பகுதியில் தேங்கியிருந்த மழை நீரை அகற்ற 100 எச்பி அளவிலான நீர் இறைக்கும் மோட்டார்கள் மூலம் மழைநீர் வடியவைக்கப்பட்டது. ஜேசிபி மூலம் மாநகராட்சி ஊழியர்கள் துரித கதியில் நீரை வெளியேற்ற இரவு பகல் பாராமல் பணியாற்றினார்கள்.

மேலும் பொது மக்களுக்கு திராவிட முன்னேற்ற கழக இளைஞர் அணி சார்பில் மாதவரம் வடக்கு பகுதி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் ஏற்பாட்டில், மழையிலும் வீடு வீடாக சென்று வாகனங்களில் உணவும், மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தங்கி இருந்த கொசப்பூர் சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அனைவருக்கும் பிரட், பாய், தலயனை போன்றவற்றை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் எம். நாராயணனும் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது வட்டச் செயலாளர் கே. கருணாகரன்,பகுதி பிரதிநிதிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, எம். நாகராஜன், டி. திவாகர், எம். ஜான்சன் பூபாலன், எஸ். சிவக்குமார், கே. சண்முக பிரியன், அரியலூர் வினோத், நாகராஜ், ராஜ்குமார், ஆனந்த், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில், கார்த்திக், கோவிந்தன், சின்னத்தோப்பு முனிவேல், கமலநாதன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

புவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமழிசை பேரூராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் சிப்காட் பகுதிகளில் சூழ்ந்துள்ள வெள்ளநீரை அகற்றுவதற்காக புவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி புதிதாக அமைக்கப்பட்டுள்ள ராட்சச இயந்திரத்தை தொடங்கி வைத்து திருமழிசை பேரூர் கழக சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி ஏற்பாட்டில் பால், ரொட்டி, பிஸ்கட் உள்ளிட்ட நிவாரணம் பொருட்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பேரூராட்சி தலைவர் ஜெ.மகாதேவன், உதவி இயக்குனர் எஸ்.ஜெயக்குமார், பேரூராட்சி செயல் அலுவலர் ம.வெங்கடேஷ், நிர்வாகிகள் ஆர்.கருணாநிதி, தி.கோ.செல்வம், ஏ.ஜனார்த்தனன், எஸ்.வேந்தன், பி.அருள், மு.சுரேந்தர், எம்.சங்கர், கே.சண்முகம், கே.எஸ்.எழிலரசன், எஸ்.பார்த்திபன், எஸ்.இளங்கோவன், க.கங்காதரன், வேலு, சதிஷ், தாமோதரன், ஜான்மேத்யூ, அன்பு, பேரூராட்சி கவுன்சிலர் விஜயலட்சுமி வேலு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாதவரம் சட்டமன்றத் தொகுதி 17வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகர் பகுதியில் தேங்கியிருந்த மழை நீரை அகற்றி, பகுதி மக்களுக்கு ரொட்டி, உணவு ஆகியவற்றை எம். என். அஜய் தென்னவன் ஏற்பாட்டில்,மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, எஸ். சிவக்குமார், கே. சண்முகப்ரியன், டி .திவாகர், என் நாகராஜன் ஆகியோர் வீடு வீடாக சென்று வழங்கினார்கள். எம். ஜான்சன், பூபாலன், விஜய் ஆனந்த், நந்தகுமார் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.